# தருமபுரி மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி (வரை),
# தருமபுரி

ந.க.எண். 149/2017/ஏ5

நாள் : 26. 09.2018

## சுற்றறிக்கை

பொருள் : மத்திய வங்கி - நெசவாளர் கூட்டுறவு சங்கங்களுக்கு அனுமதி செய்யப்பட்டுள்ள காசுக்கடனுக்கான வட்டி விகிதம் மாற்றி அமைத்தல் - தொடர்பாக.

பார்வை : தமிழ்நாடு மாநில தலைமை கூட்டுறவு வங்கி கடிதம் நக எண் C55/HFS/2018-19 நாள் 18.09.2018.

--------

பார்வையில் காணும் தமிழ்நாடு மாநில தலைமை கூட்டுறவு வங்கியின் கடிதத்தில் பிரதம நெசவாளர் கூட்டுறவு சங்கங்களுக்கு அனுமதிக்கப்பட்டுள்ள காசுகடன் வட்டி விகிதம் கீழ்கண்ட விபரப்படி நபார்டு வங்கியின் மூலம் மாற்றி நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது குறித்து தெரிவிக்கப்பட்டுள்ளது.

| விபரம் | ஏற்கனவே 05.09.18 முதல் நடைமுறையில் உள்ளது | | | தற்போது 01.10.18 முதல் மாறுதல் செய்துள்ளபடி | | |
|---|---|---|---|---|---|---|
| | தேசிய வங்கி To மாநில வங்கி | மாநில வங்கி To மத்திய வங்கி | மத்திய வங்கி To சங்கம் | தேசிய வங்கி To மாநில வங்கி | மாநில வங்கி To மத்திய வங்கி | மத்திய வங்கி To சங்கம் |
| விசைத்தறி | 7.85% | 8.35% | 10.35% | 8.10% | 8.60% | 10.60% |

எனவே தேசிய வங்கியின் மறு நிதி காசுக்கடன் பெற்று வங்கியால் அனுமதி செய்யப்பட்டுள்ள பிரதம நெசவாளர் கூட்டுறவு சங்கங்களுக்கு மேற்கண்ட வட்டி விகிதத்தினை (Monthly Discounting Factor) வங்கியில் நடைமுறைப் படுத்தப்படுகிறது. மேலும் இவ்வட்டி விகிதம் 01.10.2018 முதல் புதியதாக வழங்கப்படும் காசுகடன் தொகைக்கு மட்டுமே பொருந்தும். ஆகவே மேலே தெரிவிக்கப்பட்டுள்ள வட்டி விகிதத்தினை நடைமுறைப்படுத்தவும் வட்டி கணக்கிடுதல் மற்றும் வசூலித்தல் ஆகியவற்றை வங்கியில் ஏற்கனவே உள்ள நடைமுறையினை கடைபிடிக்க வேண்டுமெனவும் வங்கியின் தலைமையக காசுக்கடன் வரவு செலவு செய்யும் பிரிவு உதவியாளர், அனுமதிக்கும் அலுவலர் மற்றும் கிளை மேலாளருக்கு தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறு மாறுதல் செய்யப்பட்டுள்ள கடன்களுக்கான வட்டிவிகிதத்தை கணினியில் மாற்றம் செய்ய தேவையான தக்க நடவடிக்கை மேற்கொள்ள கணினி மேலாளருக்கு தெரிவிக்கப்படுகிறது.

ஒம்./- கி. ரேணுகா
இணைப்பதிவாளர் / மேலாண்மை இயக்குநர்.

பெறுநர் :-
1. மேலாளர்கள், (வங்கி / கணினி) தலைமையகம்.
2. சம்மந்தப்பட்ட கூட்டுறவு நெசவாளர் சங்கங்கள்.

நகல் :-
1. துணை இயக்குநர், கைத்தறி மற்றும் துணி நூல், சேலம்
2. கூட்டுறவு தணிக்கை உதவி இயக்குநர், மத்திய வங்கி தலைமையகம்
3. கள மேலாளர் / சரக மேற்பார்வையாளர் (கபச)
4. இணைப்பதிவாளர் /மேலாண்மை இயக்குநர், துணைப்பதிவாளர் /முதன்மை வருவாய் அலுவலர் , மற்றும் பொதுமேலாளர் ஆகியோர் மேசைக்கு.

நகல் சமர்ப்பிக்கப்படுகிறது:-
1. தமிழ்நாடு மாநில தலைமை கூட்டுறவு வங்கி, சென்னை.
2. கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் அலுவலகம், சென்னை.

/உண்மை நகல்/ 28.9.18
மேலாளர் (கபச)

28/9/18